செ. கு. எண்: 155 நாள் : 21.11.2015

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 21.11.2015

சென்னை பெருநகர காவல், எண்ணூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராகப் பணி புரிந்து வரும் திருமதி P.M.தேவி அவர்கள் 17.11.2015 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் அலுவலகப் பணி நிமித்தமாக எண்ணூர் விரைவு சாலையில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் திருமதி தேவியின் மருத்துவச் செலவுகளை அரசே ஏற்றுக் கொள்ள நான் ஆணையிட்டுள்ளேன்.

சாலை விபத்தில் பலத்த காயமடைந்த முதல் நிலை காவலர் திருமதி தேவிக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

பலத்த காயங்கள் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் திருமதி தேவி விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**